அந்த ஆறு செல்கிறது. ஆற்றின் போக்கை மாற்றுவதோடு பாதையும் மாறிவிடும். எனவே இந்த இடத்தில் பாலம் கட்டுவது உகந்தது அல்ல என்று அந்த நீராற்றலைப் பற்றி அரசுக்கு ஆலோசனையாக அந்த பூண்டி நிலையம் தெரிவித்தது. பிறகு அப்படியே நீங்கள் கட்டுவதனால் இன்னும் கொஞ்சம் கூடவே ஒரு தடுப்புச் சுவர் கட்டவேண்டும். அந்தத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு மேலும் பணம் செலவாகும். அந்தத் தடுப்புச் சுவர் வேண்டாம் என்று சொன்னால், நீங்கள் அடுத்து அதற்கு மேற்கே கொஞ்சம் தள்ளி, வேறொரு பாலம் கட்டலாம் என்று அவர்கள் ஆலோசனை கூறினார்கள். அந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்ட பிறகு அரசு ஒரு மதிப்பீடு தயார் செய்து ரூ. 245 இலட்சம் செலவிலே செய்தது. இதற்கு இடையில் கிழக்குக் கடற்கரைச் சாலை A.D.B. யினுடைய உதவியோடு நமக்குக் கிடைத்திருக்கிறது. திருவான்மியூரிலிருந்து கடலூர் வரையில் அந்த கடற்கரைச் சாலையை முதற்கட்டமாக அமைப்பதற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்து, இப்போது டெண்டர் போடுகிற நிலைமை வந்திருக்கிறது. அந்தக் கடற்கரைச் சாலையோடு இந்தச் சாலையில் சி. முட்லூரை இணைத்து விடலாம். அதற்கு சாத்தியக்கூறு இருக்கிறது என்ற காரணத்தினால் அது கைவிடப்பட்டது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் துரை கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூறிய பல்வேறு விதமான யோசனைகளை கருத்தில் கொண்டு விருத்தாசலம், பரங்கிப்பேட்டை ஊராட்சியும், கிள்ளை பேரூராட்சியும், விருத்தாசலத்தையும் பரங்கிப்பேட்டையையும் இணைக்கக் கூடிய அளவிற்கு ரூ. 300 இலட்சம் செலவில் ஒரு குறுக்குப் பாதையை அமைப்பதற்கு சுற்றுலா வாரியம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த சுற்றுலா வாரியத்திற்கு மத்திய அரசினுடைய நிதியுதவி கிடைக்கும். எனவே சுற்றுலா வாரியம் இந்த வழியை அமைக்கிறபோது தில்லை மற்றும் பிச்சாவரம், சிதம்பரம் எல்லாவற்றையும் சுற்றிப் பார்ப்பதற்கு வசதி வாய்ப்பாக இருக்கும். ஆனால் சி. முட்லூரையும், பி. முட்லூரையும் கிழக்குக் கடற்கரைச் சாலையோடு நெடுஞ்சாலைத் துறை இணைக்கும்.

திரு. எஸ். சிவலோகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பு கழக ஆட்சியில் தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது தென்னாற்காடு மாவட்டம் திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் பொதுமக்களின் நன்மையைக் கருதி, இந்தப் பாலம் முக்கியமாகக் கட்டப்படவேண்டுமென்று தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். இப்போது கழக ஆட்சி பொதுமக்களால் தரப்பட்டிருக்கிறது. இப்போது முருகன் அவர்களையே நம்பியிருக்கின்றவர்கள் நாங்கள். துரைமுருகனே இந்த இலாக்காவிற்கு அமைச்சராக இருப்பதால் அமைச்சரவர்கள் இதை எப்படியும் முயற்சி செய்து, இந்தப் பாலம் ஏற்படுவதற்கு முயற்சி எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்பினோர் கைவிடப்படார் என்பதற்கு எடுத்துக்காட்டாக உறுப்பினர் அவர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. சுற்றுலா வாரியத்திலிருந்து விருத்தாசலம், பரங்கிப்பேட்டை, கிள்ளையை இணைக்கும் சாலை ரூ. 300 இலட்சம் செலவிலே அந்தப் பாலமும் வருகிறது. கிழக்குக் கடற்கரைச் சாலையை இணைக்கின்ற பாலமும் வருகின்றது. ஆகவே இரட்டிப்பு லாபம் மாண்புமிகு உறுப்பினருக்கு.

காரணப்பட்டு ஓடையில் பாலம் கட்டுதல்

*3515—திரு. இ. புகழேந்தி :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கடலூர் பஞ்சாயத்து யூனின் காரணப்பட்டு ஓடையில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஆம். ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டில் கடின தளம் அமைக்க கடலூர் ஊராட்சி ஒன்றியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

9-40 மணி

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே வினா நேரத்தில் நன்றி சொல்லக் கூடாது என்பதனால், நீண்டகாலமாக இந்தப் பகுதியினுடைய ஆயிரக்கணக்கான மக்களுடைய அந்த ஓடைப் பிரச்சினையை தீர்த்து வைத்ததற்காக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு அந்த ஆயிரக்கணக்கான மக்களின் சார்பாக பாராட்டாவது தெரிவிக்கலாமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இங்கே பேரவையில் தெரிவித்துக் கொள்ளக் கூடாது.

ஸ்ரீவைகுண்டம் ஆற்றுப் பாலத்தை விரிவுபடுத்துதல்.

*5383—திரு. எஸ். டேனியல்ராஜ் :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1990 ஏப்ரல் 12]

ஸ்ரீவைகுண்டம் ஆற்றுப் பாலத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டத்திலே தாமிர பரணி ஆற்றின் குறுக்கே அமைந்திருக்கிற பாலமானது கிட்டத் தட்ட 1/2 கிலோ மீட்டர் நீளம் உள்ள மிகப் பெரிய பாலம். அத்தோடு குறுகிய பாலமாகவும் இருக்கிறது. ஒரு முனையி லிருந்து பார்த்தால் இன்னொரு முனை தெரியாத அளவுக்கு நீளமான பாலம். அத்தோடு மட்டுமல்லாமல் திருநெல்வேலியி லிருந்து திருச்செந்தூர் வரை செல்கிற அனைத்துப் பஸ்களும் இந்தப் பாலத்தின் வழியாகத்தான் ஸ்ரீவைகுண்டம் பேருந்து நிலையத்திற்கு வந்துக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று ஸ்ரீவைகுண்டத்திலிருந்து செல்லுகிற பஸ்களெல்லாம் இந்தப் பாலத்தின் வழியாகத்தான் செல்லுகின்றன. மேலும் லாரி போக்குவரத்துகள், மற்ற வாகனப் போக்குவரத்துகள் எல் லாம் இந்தப் பாலத்தின் மூலமாகத்தான் சென்று கொண்டிருக் கின்றன. ஆகையினால் இந்த போக்குவரத்து நெரிசலை மன திலே கொண்டு அடிக்கடி விபத்து நடப்பதை தவிர்க்கின்ற நோக் கத்திலே அந்த ஸ்ரீவைகுண்டம் ஆற்றுப் பாலத்தை விரிவு படுத்துவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

9.40 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல 400 மீட்டர் நீளம் உள்ள ஒரு பாலம் அது. அந்தப் பாலம் 1869 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இரும்பு பாலம். அது இன்னமும் நல்ல நிலை யிலே இருக்கிறது. ஆகையினால் அதை மீண்டும் புதுப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது. 120 ஆண்டுகள் ஆனதற்கு பிறகும் இந்தப் பாலம் வலுவிழக்காமல் இருக்கிறது. ஆனால் அதிலே ஒரு பிரச்சினை என்னவென்றால் ஒரு வழி பாதையாகப் போகலாம். அதே பாலத்தை விரிவு படுத்தி இருவழி பாதையாக ஆக்கினால் அது தாங்குமா என் பது ஒரு கேள்விக்குறி. எனவே ஒரு வழிப் பாதையாக இந்தப் பாலம் இருக்கட்டும். அதற்கு இணையாக மற்றொரு பாலத்தை அமைக்கலாமா என்று அரசு யோசித்துக் கொண் டிருக்கிறது. அதற்கு சுமார் 400 லட்சம் செலவு ஆகும் என்று கணக்கிடப்பட்டிருகிறது. நிதி நிலை ஆதாரங்களை வைத்து அது பற்றி ஆய்வுக்செய்து வருங்காலத்தில் அரசு அதை அமைக்க முயற்சிகளை எடுத்துக் கொள்ளும்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் ஆற்றுப் பாலத்தை விரிவு படுத்துவதற்கு சில சங்கடங்கள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே போக்குவரத்து நெரிசலை தவிர்க்கின்ற விதமாய் ஸ்ரீவைகுண்டம் அருகிலே ஆழ்வார் திருநகரி, ஆழ்வார் தோப்பு ஆகிய கிராமங்களுக்கு இடையிலே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு பாலத்தை அமைப்பதன் மூலமாக அந்தப் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கும் முடியும். அதேபோல் பாளையங்கோட்டை தூத்துக்குடி, திருநெல்வேலி மெயின்ரோட்டுக்கும் ஆழ்வார் திரு நகரிக்கும் இடையே ஒரு போக்குவரத்தை உருவாக்குவதற்கும் அது வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, ஆழ்வார் திருநகரி, ஆழ்வார் தோப்புக்கிடையே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு பாலத்தை அமைப்பதற்கு அரசு முன் வருமா என்பதைஅறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, தற்போது தந்த யோசனைக்கு நன்றி. பிறகு அது பற்றி யோசிக்கலாம்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நொய்யலாற்றின் மீது அல்லது ரயில்வே பாதைகளின் மீது வரும் நிதி ஆண்டில் தமிழகத்தில் எத்தனை பாலங்கள் எங்கெங்கு கட்டப்பட உள்ளன? அதில் திருப்பூர் ரெயில்வே மேம்பாலமும், நொய்யலாற்றின் மேம்பாலமும் சேர்க்கப்பட்டுள்ளதா? அந்தப்பணி எப்போது தொடங்கும் என்பதை அமைச்சர் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர் களே, இது ஸ்ரீவைகுண்டம் பாலம் பற்றிய கேள்வி. ஆனால், ஆர்.ஓ.பி. பற்றி நேற்று கேள்வி வந்தது. நேற்று யு மிஸ்ட் தி பஸ். நேற்று கேள்வி கேட்டிருந்தால் அது எப்போது வரும் என்பதை சொல்லியிருக்கலாம். நாளைக்கு வேண்டுமானால் கேளுங்கள் சொல்லுகிறேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் எல்லா ஊர்களுக்கும் பாலத்தைக் கொடுத்துக் கொண்டே இருக் கிறார்கள். எங்கள் மாவட்டம், தஞ்சை மாவட்டம் நிறைய ஆறுகள் வாய்க்கால்கள் உள்ள மாவட்டம். அந்தப் பகுதி யிலே வெள்ளக் காலங்களில் தண்ணீர் வரும் காலங்களில் மக்கள் மிகவும் சிரமப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே சிறு சிறு பாலங்களாகத் தான் வருகின்றன. ஆகவே பகுதி 2 திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்திற்கு வந்திருக்கிற 3 பாலங்களையும்